**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

**அ.வ.எண்.88/2023**

2026-ம் ஆண்டு ஜுன் மாதம் 17-ஆம் நாள் புதன்கிழமை வாதி **(வா.சா.1 )** தரப்பு சாட்சியின் சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | டேவிட் வில்சன் | **சமயம்** | : | |
| **த/பெ** | : | இயேசு வடியான் | **வயது** | : | 71 |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | | : | |

**வா.சா. 1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை** :

1) நீங்கள் மனைவியின் சார்பில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என் மனைவிக்கு வயோதியின் காரணமாகவும் நோயின் காரணமாகவும் சாட்சியம் அளிக்க இயலவில்லை என கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய மனைவி என்னை விட வயதில் குறைந்தவர் என்றால் சரிதான். உங்கள் மனைவி என்ன நோயினால் பிடிக்கப்பட்டுள்ளார் என்பதற்கு நான் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உங்கள் மனைவியை நீதிமன்றத்தின் மூலமாக உங்கள் வீட்டில் வைத்தே விசாரிக்க முடியும் என்று தெரியுமா என்றால் தெரியும். என் மனைவி நேர்மையானவர் என்றும், நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கும் பட்டசத்தில் உண்மை நிலையை கூறிவிடுவாள் என்பதல் நான் அதனை தடுத்துஎன் மூலம் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிர்வாதி குடும்பத்தை பற்றி தெரியுமாஎன்றால் தெரியாது.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.17 15:59:21 +0530

2) துரைகுடியிருப்பு என்ற ஊரில் யாதவர் சமுதாயத்தை சார்ந்தவர்கள் குறிப்பாக மேலூரில் அதிகமாக வசித்து வருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.243 மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. மேற்படி சர்வே எண்.243 எந்த வருடம் உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி எத்தனை உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நீங்கள் சர்வே எண்.243/1 தொடர்பாக இவ்வழக்ககை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரிதான். சர்வே எண்.243/1 மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 30 செண்ட் என்றால் சரிதான். சர்வே எண்.243 உட்பிரிவு செய்வதற்கு முன்பு எத்தனை பட்டாதாரருக்கு பாத்தியப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.243 உட்பிரிவு செய்யப்பட்டதற்கு பின்பு எத்தனை பட்டாதாரருக்கு பாத்தியப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.243 உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு கூட்டு பட்டா எத்தனை நபர்களுக்கு ஏற்பட்டது என்றால் கூட்டு பட்டா ஏற்படவில்லை. என்னுடைய கிரைய காலத்திற்கு முன்பு பட்டா எண்.1722 ஐ பற்றி கேள்ளி பட்டுள்ளேள் என்றால் கேள்விபட்டுள்ளேன்.

3) என்னுடைய கிரைய காலத்திற்கு முன்பு சர்வே எண்.243 ஐ பொறுத்து நான் வில்லங்க சான்றை பார்த்தேன் என்றால் பார்த்தேன். மேற்படி வில்லங்க சான்று போட்டு பார்த்ததில் 1971 யே எதிர்வாதி வகையறா பெயரில் வில்லங்கம் ஏற்பட்டுள்ள விவரம் பற்றி தெரிய வந்ததா என்றால் அது பற்றி சரியாக ஞாபகம் இல்லை. நான் 1996 ல் 3 கிரைய பத்திரங்கள் மூலமாக கிரையம் பெற்றேன் என்று கட்சி செய்கிறேன் என்று சொன்னால் சரிதான். அதில் முதல் கிரையம் 02.01.1996 கிரையம் பெற்றதாக கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். மேற்படி கிரையம் பெற்ற பத்திரத்தில் கிரையம் கொடுத்த நபர்களுக்கு கிரைய சொத்து 1967 ல் ஏற்பட்ட கிரைய வழி பாத்தியப்பட்டதாக கூறப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.17 15:59:27 +0530

நீங்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பும், பின்பும் வழக்கு போட்ட பின்பும் 02.01.1996 கிரைய பத்திரத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். 02.01.21996 கிரையம் பெற்ற பத்திரம் மூலம் எத்தனை சொத்துகள் கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமாஎன்றால் அது பற்றி ஞாபகம் இல்லை.

4) 02.01.1996 ல் சர்வே எண்.243 ல் பிரிவின்றி சொத்து தான் கிரையம் பெறப்பட்டது என்று சொன்னால் அது பற்றி சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி 02.01.1996 ல் சர்வேஎண்.243 ல் எவ்வளவு சொத்து கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி சரியாக ஞாபகம் இல்லை. 02.01.1996 ல் ஏற்பட்ட கிரையம் ஏற்பட்ட பத்திரத்தில் அடிப்படையில் சுவாதீனம் ஒப்படைக்கபடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண். 243 ன் முதல் கிரைய பத்திரத்தின் அடிப்படையில் எந்த பக்கம் ஒப்படைக்கப்பட்டது என்றால் அது பற்றி என்னால் சொன்ன இயலாது. என்னுடைய கிரைய பத்திரத்தில் நான்கு மால் எல்கை சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கூறுவதற்கு மாறாக 02.01.1996 ல் கிரையம் பெற்ற ஆவணம் அமைந்திருந்தால் தவறு என்றால் சரிதான். 02.01.1996 ல் கிரையம் வாங்கும்போது எத்தனை பங்குதாரர்கள் உண்டு என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 9 பங்காளிகள் ஆவார்கள். மேற்படி 9 பங்காளிகளுக்கு எத்தனை செண்ட் அளிக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

5) 16.04.1996 ல் சர்வே எண்.243 ல் 2 வதாக கிரையம் பெற்றதாக ஒரு கிரைய பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 16.04.1996 ல் சர்வே எண்.243 ல் கிரைய பெற்ற காலத்தில் சொத்து யாருக்கு உண்டு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். கிரையம் கொடுத்த நபர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்ற ஆவண விவரம் அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 02.01.1996 ல் கிரைய பெற்ற காலத்தில் கிரையம் கொடுத்த

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.17 15:59:32 +0530

நபர்களுக்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு மூலபத்திரத்தை என்னிடம் ஒப்படைத்தார்களாஎன்றால் சரியல்ல. நான் மூலபத்திரத்தின் நகலை எடுத்து பார்த்தேனா என்றால் அது பற்றி சரியாக ஞாபகம் இல்லை. மூன்றாவதாக கிரையம் பெற்ற 16.04.1996 ல் கிரைய கொடுத்தவர்களுக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பவதற்கு ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

6) 1996 க்கு முன்பு எனக்கு கிரையம் கொடுத்த நபர்கள் சர்வே எண்.243/1 ஐ அனுபவம் செய்ததற்கு 10(1) கணக்கு எண்.2, பட்டா மற்றும் தீர்வை இரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி 3 ஆவணங்களையும் எந்த பகுதி கிரையம் செய்து கொடுத்ததை பற்றிய விவரம் தெரியுமா என்றால் அது பற்றி சரியாக ஞாபகம் இல்லை. நீங்கள் கிரையம் பெற்ற 3 கிரைய பத்திரங்களிலும் சர்வே எண்.243 பிரிவின்றி உள்ள சொத்தை கிரையம் கொடுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ள விவரம் தெரியுமாஎன்றால் தெரியாது. 1996 ல் ஏற்பட்ட கிரைய பத்திரத்தின் அடிப்படையில் வருவாய் துறை ஆவணங்களை மாற்றி நான் அனுபவித்து வந்ததை காட்ட 10(1) கணக்கு எண்.2, பட்டா மற்றும் தீர்வை இரசீதுகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 ஆவங்களை தவிர வேறு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் வேறு வழக்கில் தாக்கல் செய்ததாக சாட்சி பதில் கூறினார்.

7) பட்டா எண்.1722 ஐ 2015 ல் வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 வழக்கிற்கு பின்னிட்டு ஆவணம் என்றால் சரிதான். தாவா வழக்கில் நகல் எடுத்து ஆவணங்களை தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். பட்டா எண்.1722 ஆரம்பகாலத்தில் 11 நபர்கள் பெயரில் இருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். 2015 லே பிரதிவாதி நாராயணதாஸ் வாதிக்கு பட்டா வழங்குவது தொடர்பாக ஆட்சேபனை செய்த விவரம் தெரியுமா

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.17 15:59:37 +0530

என்றால் தெரியும். பட்டா எண்.1722 ல் பிரதிவாதி நாராயணதாஸ் தகப்பனார் பெயர் மற்றும் தாத்தா பெயர் குறிப்பிடப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய மனைவி பெயர் கூட்டு பட்டாவில் 11 வது பெயராக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாசானகோனார் மகன் வேலுகோனார் பட்டாதாரர்களின் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எம்பெருமானார் மகன் மாசானகோனார் பட்டாதாரர்களின் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பெருமாள் கோனார் மகன் வேலுகோனார் பட்டாதாரர்களின் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுடலைமுத்து கோனார் மகன் மாசானகோனார் பட்டாதாரர்களின் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுடலைமுத்து கோனார் மகன் வேலுகோனார் பட்டாதாரர்களின் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இசக்கிமுத்துகோனார் மகன் சுடலைமுத்து, அருணாச்சலம் மற்றும் சண்முகம் பட்டாதாரர்களின் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பகவதி கோனார் மகன் கந்தகோனார் பட்டாதாரர்களின் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சுப்பையா கோனார் மனைவி ஒளிமுத்து அம்மாள் பட்டாதாரர்களின் ஒருவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உங்கள் மனைவி பெயரில் ஏற்பட்ட விண்ணபத்தின் அடிப்படையில் என் மனைவியின் பெயரில் ஒரே பட்டாவாக ஏற்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.5 பட்டாவை ஆவணங்கை பரிசீலனை செய்யப்படாமல் விசாரணை மேற்கொள்ளபடாமல் இயற்கை நியதிக்கு எதிராக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனவே தான் நான் பட்டா விண்ணப்பத்திற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.212/2012 ல் வா.சா.ஆ 7, வா.சா.ஆ 8 மற்றும் வா.சா.ஆ.9 வழக்கில் கண்ட நபருக்கு எதிர்வாதிக்கு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான். 2012 வருடம் முதல் பிரதிவாதி எங்களது உரிமை முலத்தை மறுத்து வருகிறார் என்றால் சரிதான்.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.17 15:59:43 +0530

8) தாவா வழக்கில் நாராயண தாஸ்க்கு உரிமை இல்லாத நிலையில் எங்கள் அனுபவத்தை இடையூறு செய்து வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கடந்த 14 வருடங்களாக எங்களுக்கு பிரச்சனை நடந்து வருகிறது என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். மேற்படி எதிர்வழக்குரையில் எதிர்வாதி 03.05.1971 ல் அளித்த கிரைய பத்திரத்தின் வழி சண்முக கோனாருக்கு 15 ல் 1 பாகம் உரிமை உள்ளதாக கூறப்பட்டுள்ள விவரம் தெரிய வந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி 1971ம் ஆண்டு ஏற்பட்ட ஆவணத்தை நகல் எடுத்து நான் பார்த்துள்ளேனா என்றால் எடுத்து பார்க்கவில்லை. உங்களை எதிர்த்து எதிர்வாதி வாதியின் உரிமை மூலத்தை மறுக்கு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். உங்களது உரிமை மூலம் மறுக்கப்பட்டதன் பின்னரும் வழக்கின் தன்மையை மாற்ற நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி கூறும் 1971ம் ஆண்டு ஏற்படுத்திய கிரைய ஆவணம் மோசடியான பத்திரம் என்று எந்த நீதிமன்றத்திலிருந்தும் தீர்ப்பு பகரப்படவில்லை என்றால் சரிதான்.

9) 2012ம் வருடத்திலிருந்து உங்களுடைய உரிமை மறுக்கப்பட்டுள்ளதால் விளம்புகை பரிகாரம் கேட்க எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. பத்திரத்தில் அடித்தல் திருத்தம் இருந்தால் அதனை குறிப்பிட்டு திருத்த விவரம் தெரிவிக்கவேண்டும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் 14.04.1996 ல் கிரையம் பெற்ற பத்திரத்தில் வரி 7 ல் திருத்தம் செய்யப்பட்ட விவரத்திற்கு குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் 26.08.1996 ல் ஏற்பட்ட கிரைய பத்திரத்தில் பக்கம் 2ல் ஏற்கனவே தங்கள் வசம் மேற்படி சர்வே எண்.243 ல் திருத்தங்கள் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி திருத்தம் குறித்து குறிப்புகள் இல்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.243/1ல் நான் முழு சுவான்தாரர்

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.17 15:59:48 +0530

இல்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.243/1 ஐ பொறுத்து எதிர்வாதியும் ஒரு கூட்டு உரிமையாளர் என்றும், எனவே கூட்டு உரிமையாளருக்குஎதிராக நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரிதாக்கல் செய்யப்பட்டதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கின் காரணகாரியம் 2012 ம் ஆண்டில் ஏற்பட்டுவிட்டதால் இவ்வழக்கில் காரணகாரியம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நஷ்ட ஈடு செலவு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. ஆகவே இவ்வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.06.17 15:59:53 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.